மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி
அ.வ.எண்.62/2021
வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் வா.சா.1.
---

பெயர். – திரு.கிருஷ்ணசாமி
த/பெ. – கிருஷ்ணசாமிரெட்டியார்
கிராமம் – குப்பனாபுரம்
தொழில் – விவசாயம்
தாலுகா – கயத்தார்
வயது – 78

1875–ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2024–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 2–ஆம் நாள் இந்நீதிமன்ற உதவியாளரால் சத்தியபிரமாண வாக்குமூலம் செய்யப்பட்டு, முதல் விசாரணை செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை.–

1) நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை எனது சாட்சியத்தை வாதி தரப்பில் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1 | 13.08.1960ம் தேதிய வாதியின் தகப்பனார் கிருஷ்ணசாமி ரெட்டியார் பெயரில் உள்ள கிரைய ஆவணம் அசல் **வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |
| 2 | 1984ம் ஆண்டு வாதியின் தகப்பனார் கிருஷ்ணசாமி ரெட்டியார் இறந்து போனதற்கான இறப்பு குறித்த சார்பதிவாளர் மேலேழுத்து அசல் **வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |
| 3 | 09.11.2020ம் தேதிய தபசில் சொத்தினை பொறுத்து SLR நகல் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |
| 4 | பிராது தபசில் சொத்திற்குரிய வாதி பெயரிலான தீர்வை ரசீதுகள் எண்ணம் 5 அசல் **வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |
| 5 | 28.06.2006ம் தேதியில் பிராது தபசில் சொத்தை பொறுத்து 1ம்பிரதிவாதி 2ம்பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துள்ள கிரைய ஆவணம் சார்பதிவக நகல் **வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |
| 6 | 30.10.2014ல் 2ம்பிரதிவாதி 3ம்பிரதிவாதிக்கு தாவா சொத்தை பொறுத்து ஏற்படுத்தி கொடுத்த கிரைய ஆவணத்தின் சார்பதிவக நகல் **வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |
| 7 | 09.03.2021ல் எனது தரப்பு வழக்கறிஞர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |

| | |
|---|---|
| 8 | 1,2 பிரதிவாதிகள் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்ட அஞ்சலக கவர் எண்ணம் 2 **வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை – வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
02.12.2024.